join meeting

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 6.**

**ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள். 19.05.2023**

**பொருள்:** பள்ளிக் கல்வி – 2023–2024 ஆம் கல்வியாண்டில் கல்வி இணை/கல்விசாரா மன்றச் செயல்பாடுகள் – போட்டிகள் நடத்துதல் – பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் – முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள், ந.க.எண். 19528/எம்/இ1/2022, நாள்.11.06.2022.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள், ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள். 22.08.2022.

******

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி இணைச் செயல்பாடுகளை ஊக்குவிக்க வெவ்வேறு காலகட்டங்களில் இலக்கியம், கவின்கலை, சூழலியல் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு நடைமுறையில் இருந்தன. கொரோனா பெருந்தொற்றால் கடந்த சில ஆண்டுகளாக இம்மன்றங்கள் செயல்படாத நிலையில் அவற்றைப் புதுப்பித்து சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்யப்படும் என அறிவித்தார்.

பார்வை 2–இன்படி 2022–2023 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடன் மன்றச் செயல்பாடுகளில் பங்கேற்க வேண்டும் என்பதற்காக பள்ளி அளவில், ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் வினாடி–வினா போட்டிகள், இலக்கியமன்றம், வானவில் மன்றம், திரைப்படம் திரையிடுதல், கலை மற்றும் கலாச்சாரம் சார்ந்த போட்டியை ஒவ்வொரு மாதமும் நடத்தப்பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், பள்ளி அளவில் கல்வி சாரா மன்றச் செயல்பாடுகளான தொன்மைப் பாதுகாப்பு மன்றம் / நுகர்வோர் மன்றம் / தகவல் தொழில்நுட்ப மன்றம் / பேரிடர்

மேலாண்மை மன்றம் / வாக்காளர் விழிப்புணர்வு மன்றம் / குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மன்றம் போன்ற மன்றங்களை அவரவர் பள்ளியின் சூழ்நிலைக்கேற்ப நிறுவிச் செயல்பாடுகளைச் செய்யலாம் என பார்வை 2-இல் காணும் செயல்முறையின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

2023-2024 ஆம் கல்வியாண்டில் மன்றச் செயல்பாடுகளை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக வகுப்பு கால அட்டவணையில் ஒவ்வொரு வாரமும் இரு பாடவேளைகள் கலை செயல்பாடுகளுக்கும், (Art and Culture) இரு பாட வேளைகள் மன்றச் செயல்பாடுகளுக்கெனவும் (Club Activities) ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு, அரசு நிதி உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் மன்றச் செயல்பாடுகளில் ஆர்வமுடன் பங்கேற்கும் வகையில், உரிய அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும், இலக்கிய மன்றம், வானவில் மன்றம், வினாடி-வினா போட்டிகள், திரைப்படம் திரையிடுதல் சார்ந்த போட்டிகள் அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பளித்து பள்ளி அளவில் நடத்தப்பட வேண்டும். பள்ளி அளவில் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் ஒன்றிய அளவிலும், ஒன்றிய அளவில் தேர்வு செய்யப்படும் மாணவர்கள் மாவட்ட அளவிலும் நடைபெறும் போட்டிகளுக்கு தயார்படுத்தி சிறந்தமுறையில் நடத்தப்பட வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் மன்றச் செயல்பாட்டிற்கான கால அட்டவணை, போட்டிகள் நடத்துவதற்கான தலைப்பு/பொருண்மை, ஒவ்வொரு நிலையிலும் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் விவரம் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை தலைமையாசிரியர்களுக்கு மன்றச் செயல்பாடுகளை நடத்துவது சார்ந்து தக்க அறிவுரை வழங்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், ஒன்றிய அளவில் நடைபெறும் மன்ற போட்டிகளை மாவட்ட கல்வி அலுவலக பள்ளித் துணை ஆய்வாளரும், மாவட்ட அளவில் நடைபெறும் மன்ற போட்டிகளை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக பள்ளித் துணை ஆய்வாளரும், பொறுப்பேற்றுக் கொண்டு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி போட்டிகளை நடத்தி முடித்து மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்களின் விவரங்களை பள்ளிக் கல்வி ஆணையரகத்திற்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒவ்வொரு மன்றச் செயல்பாடுகளிலும் பள்ளி அளவில் குறிப்பிடத்தக்க வகையில் சிறந்து விளங்கும் படைப்புகளை துறையால் வெளியிடப்படும் சிறார் இதழில் இடம்பெறச் செய்ய, "ஆசிரியர், தேன்சிட்டு, 8 வது தளம், ஈ.வெ.கி.சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை–6" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் மாணவரின் பெயர், ஆசிரியர் மற்றும் பள்ளியின் பெயர் மற்றும் புகைப்படத்துடன் தேன்சிட்டு / கனவு ஆசிரியர் இதழில் வெளிவரும் என்று தெரிவிக்கலாகிறது.**

**இணைப்பு:** இணைப்பு 1

**பள்ளிக் கல்வி ஆணையர்**

**பெறுநர்**
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். (மின்னஞ்சல் வழியாக)

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம்,
   சென்னை – 9.
2. மாநிலத் திட்ட இயக்குநர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6.
3. தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–06.**

**ந.க.எண்.024702/எம்/இ1/2023, நாள். 19.05.2023**

**பொருள்:–** பள்ளிக் கல்வி – 2023–2024 கல்வியாண்டு நாட்காட்டி அனுப்புதல் – EMIS இணையதளத்தில் பள்ளி, வகுப்பு, ஆசிரியர்கள் வாரியாக கால அட்டவணை தயாரித்தல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:–**
1. அரசாணை (நிலை) எண். 163/பள்ளிக் கல்வி (ERT)த் துறை, நாள்.10.07.2017
2. பள்ளிக்கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள். 11.06.2022.

---

அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களான 'இல்லம் தேடிக் கல்வி', 'எண்ணும் எழுத்தும்', நான் முதல்வன், அனைத்து வகுப்புகளுக்கும் சிறார் இதழ்கள், மாதந்தோறும் சிறார் திரைப்படம் திரையிடல், மாணவர்களின் பன்முகத் திறமைகளை வெளிக் கொணர ஏதுவாக வானவில் மன்றம் உள்ளிட்ட பல்வேறு மாணவர் மன்றங்கள் என நிறைவுற்ற கல்வி ஆண்டில் பற்பலப் புதிய முன்னெடுப்புகள் பள்ளிகளுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளன.

இவற்றை சிறப்பாக செயல்படுத்த 2023–2024 கல்வியாண்டில் அரசு/அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான நாட்காட்டி உருவாக்கப்பட்டு மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது.

2023–2024 ஆம் கல்வியாண்டிற்கான நாட்காட்டியில் பள்ளி தொடங்கும் நாள், தேர்வுகள் நடைபெறும் நாள், ஆசிரியர்களுக்கான பயிற்சி நாட்கள், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, தலைமையாசிரியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி, மன்ற செயல்பாட்டிற்கான பயிற்சி, எண்ணும் எழுத்தும் சார்ந்த பயிற்சி, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கான பயிற்சி, தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயிற்சி, பருவத் தேர்வு அட்டவணை மற்றும் 10,11,12 ஆம் வகுப்பிற்கான பொதுத்தேர்வு தொடக்கம் என பல்வேறு தரவுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அரசு /அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் நாட்காட்டி அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களை முழுமையாக பின்பற்றி வரும் கல்வியாண்டு சிறப்புற அமைய உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்ககல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2023-2024 கல்வியாண்டில் பள்ளிக்கான/வகுப்புக்கான/ஆசிரியர்களுக்கான கால அட்டவணைகள் EMIS தளத்தின் வாயிலாக எளிதாக உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. பள்ளி துவங்கும் நேரம், முடியும் நேரம், ஒவ்வொரு வகுப்பிற்கும் வகுப்பாசிரியர் மற்றும் பாட ஆசிரியர்களின் விவரங்களை உள்ளீடு செய்தபிறகு வகுப்புவாரியாக, ஆசிரியர்வாரியான கால அட்டவணையை உருவாக்கலாம். இந்த விவரத்தினை அனைத்து அரசு/அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்து கால அட்டவணை தயாரித்தல் பணியினை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்க கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :-**

1.) 2023-24 ஆம் ஆண்டு நாட்காட்டி
2.) பள்ளி/வகுப்பு வாரியாக கால அட்டவணை
உருவாக்குவதற்கான வழிகாட்டுதல் கட்டகம்.

**தொடக்கக்கல்வி இயக்குநர்** | **பள்ளிக்கல்வி ஆணையர்**

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர்கள்.

**நகல்**

1. கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS).
2. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநில திட்ட அலுவலகம், சென்னை-06.